# 1

# அல் - அகாயித்

## 1.1 அகீதா

அகீதா என்பது இஸ்லாத்தின் அடிப்படை நம்பிக்கைக் கோட்பாட்டைக் குறித்து நிற்கின்றது. இதனை ஒரு முஸ்லிம் சரியான முறையில் ஏற்றுக்கொள்வதும் அதனடிப்படையில் வாழ்க்கையை அமைத்துக்கொள்வதும் அவசியமாகும். இதனை **'அகாயித்'** எனப் பன்மைச் சொல்லிலும் வழங்குவதுண்டு. மனித வாழ்க்கை நம்பிக்கைகளின் அடிப்படையிலேயே இயங்குகின்றது. இவ்வகையில் இஸ்லாமிய அகீதாவை ஏற்று அதன்படி வாழ்பவர்களே முஸ்லிம்களாவர். அகீதா வஹி மூலம் பெறப்பட்டதாகும். அது நம்பிக்கையோடு மாத்திரமன்றி அதனடிப்படையில் இபாதத், முஆமலாத், அஹ்லாக் ஆகிய அனைத்தோடும் தொடர்புடையதாகும்.

உதாரணமாக:- வட்டி முஆமலாத்துடன் தொடர்பானது. ஆனால், ஒரு முஸ்லிம் வட்டி ஹலால் என்று கூறுவானாயின் அவன் இஸ்லாமிய அகீதாவை நிராகரித்தவனாக மாறுகிறான். வட்டியை நடைமுறைப்படுத்துவானாயின் அவன் பாவியாகிறான். நபியவர்களது காலத்தில் இஸ்லாமிய அகீதா மிகத் தூய்மையாகவும் எளிமையாகவும் இருந்தது. பிற்காலத்தில் சுயநலம், பிற கலாசாரத் தாக்கம் என்பவற்றால் அது மாசுபட்டது. அதனைக் களைவதற்காகப் பல அறிஞர்கள் பெரும் பணியாற்றியுள்ளனர்.

இஸ்லாமிய அகீதாவில் பல விடயங்கள் உள்ளடங்குகின்றன. அவற்றை அல் குர்ஆனும், அல் - ஹதீஸும் எவ்வாறு கூறியுள்ளனவோ அவ்வாறே நம்புவது அவசியமாகும். புலன்களுக்கும், பகுத்தறிவுக்கும் அவை புரியாவிட்டாலும் அவை கூறும் விதமாகவே அவற்றை விசுவாசிக்க வேண்டும்.



இலவச விநியோகத்திற்காக

**இஸ்லாமிய அகீதாவில் பல விடயங்கள் உள்ளன. அவற்றைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.**

01. அல்லாஹ் பற்றிய நம்பிக்கை : இப்பிரிவில் அல்லாஹ் இருக்கின்றான்.அவன் ஒருவனே என்பதற்கான ஆதாரங்கள், அல்லாஹ்வின் திருநாமங்கள், பண்புகள், பிரபஞ்சத்தில் அவனது வல்லமையினதும் மகத்துவத்தினதும் வெளிப்பாடுகள் முதலியன நோக்கப்படுகின்றன.
02. புலன்களுக்கு அப்பாற்பட்ட உலகம் பற்றிய நம்பிக்கை : இப்பிரிவில் மலக்குகள், ஷைத்தான்கள், ரூஹ் (ஆன்மா) பற்றிய விளக்கங்களும் இடம்பெறுகின்றன.
03. சத்தியம் - அசத்தியம், நன்மை - தீமை, அனுமதிக்கப்பட்டது - தடை செய்யப்பட்டது ஆகியவற்றை விளக்கிக் காட்டுவதற்காக அல்லாஹ் இறக்கி வைத்த வேதங்கள் பற்றிய நம்பிக்கை.
04. உலகில் சத்தியத்தின் காவலராகவும், நேர்வழியின் ஒளிவிளக்காகவும் விளங்கிய நபிமார்கள், ரஸூல்மார்கள் பற்றிய நம்பிக்கை.
05. மறுமைநாள் பற்றிய நம்பிக்கை : இப்பிரிவில் கப்று, ப.ஃஸ், மஹ்ஷர், ஹிஸாப், ஸிராத், மீஸான், ஜன்னா, நார் முதலிய விடயங்கள் இடம் பெறுகின்றன.
06. முழுப் பிரபஞ்சத்தினதும், அதிலுள்ள உயிரினங்கள் அனைத்தினதும் ஒழுங்கையும் இயக்கத்தையும் நிர்ணயிக்கின்ற கழாகத்ர் பற்றிய நம்பிக்கை.

மேற்கூறப்பட்ட விடயங்களை இஸ்லாமிய அகீதாத் துறை சார்ந்த அறிஞர்கள் பின்வரும் தலைப்புக்களில் வகுத்துள்ளனர்.

1. **அல் - இலாஹிய்யாத் :** இதில், அல்லாஹ் பற்றிய நம்பிக்கையுடன் தொடர்பான விடயங்களும், கழாகத்ர் பற்றிய விடயங்களும் உள்ளடங்குகின்றன.
2. **அந்நுபுவ்வாத் :** நபிமார்கள், ரஸூல்மார்கள், அவர்களின் பண்புகள், வேதங்கள் உட்பட மு.ஃஜிஸா, கராமா முதலான விடயங்கள் இதில் உள்ளடங்குகின்றன.
3. **அர்ரூஹானிய்யாத் :** சட உலகுக்கும் புலன்களுக்கும் அப்பாற்பட்ட விடயங்கள் இப்பகுதியில் விளக்கப்படுகின்றன. மலக்குகள், ஜின்கள், ஷைத்தான்கள், ரூஹ் போன்ற விடயங்கள்இதில் அடங்கும்.
4. **அஸ்ஸம்இய்யாத் :** இதில் மறுமை வாழ்வுடன் தொடர்புடைய விடயங்கள் உள்ளடங்குகின்றன.கப்றுடைய வாழ்க்கை, உலக முடிவின் அடையாளங்கள், ப.ஃஸ், மஹ்ஷர் போன்ற விடயங்கள் இதில் அடங்கும்.

பிற்பட்ட காலங்களில் முஸ்லிம் சமூகத்துள் ஊடுருவிய அரசியல் உட்பூசல்கள், அந்நியரின் சிந்தனைகள், சமயப்பிரிவுகள், பகுத்தறிவை எல்லை கடந்து பிரயோகித்தமை போன்ற காரணங்களால் அகீதா அதன் எளிமைத் தன்மையை இழந்தது. அதன் உயிரோட்டமும் குன்றியது. அகீதா சார்ந்த தத்துவார்த்த சர்ச்சைகளும், தர்க்க ரீதியான வாதங்களும் தோன்ற ஆரம்பித்தன.

உள்ளத்தைத் தூய்மைப்படுத்தி, நடத்தையைச் சீர்செய்து, தனிமனிதனையும் சமூகத்தையும் உயர்நிலைக்குக் கொண்டுசெல்ல வேண்டிய அகீதா, தத்துவ விசாரணைக்குட்பட்ட வெறும் ஆய்வுப் பொருளாக மாறும் ஆபத்தானநிலை தோன்றியது. இதன் விளைவாகக் காலப்போக்கில் அகீதாவை மையமாகக்கொண்டு பல சிந்தனைப் பிரிவுகள் தோன்றின. கதரிய்யா, ஜபரிய்யா, முர்ஜிஆ, மு.ஃதஸிலா, ஷீயா, கவாரிஜ் போன்றவற்றை இவற்றுக்கு உதாரணங்களாகக் குறிப்பிடலாம். இவை வழிகேடான சிந்தனைகளை முன்வைத்தன. இந்நிலையில் இஸ்லாமிய அகீதாவின் தூய்மையைப் பாதுகாப்பதற்காகப் பல இமாம்கள் முன் நின்று உழைத்தனர். அவர்களுள் அஹ்மத் இப்னு ஹன்பல், அபுல் ஹஸன் அல்அஷ்அரி, அபூமன்சூர் அல்மாதுரூதி, அபூஜ.ஃபர் அத்தஹாவி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவார்.

இவர்கள் அல்-குர்ஆன், அஸ்-ஸுன்னா அடிப்படையிலான ஆதாரங்களை முன்வைத்ததும், தர்க்க ரீதியான விளக்கங்களை அளித்தும் உண்மையான கோட்பாட்டை சமுதாயத்தில் நிலைநிறுத்தினர். அதுவே அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஅத் என வழங்கப்படுகின்றது. அதுவே நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் அவர்களது தோழர்களும் வாழ்ந்து காட்டிய வழிமுறையாகும். நாமும் அதனையே பின்பற்றுகின்றோம்.

எனவே, இஸ்லாத்தின் தெளிவான அகீதாவை விளங்கி அதன் அடிப்படையில் வாழ்க்கையை ஒழுங்குபடுத்திக் கொள்வது முஸ்லிமுடைய கடமை என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

## செயற்பாடுகள்

பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.

01. அகீதா என்றால் என்ன?
02. இஸ்லாமிய அகீதாவின் உள்ளடக்கத்தைக் குறித்துக் காட்டுக.
03. பின்வருவன பற்றி சுருக்கமான விளக்கம் தருக.
    - அ) அல்-இலாஹிய்யாத்
    - ஆ) அந்நுபுவ்வாத்
    - இ) அர்ரூஹானிய்யாத்
    - ஈ) அஸ்ஸம்இய்யாத்
04. அகீதாவை மையமாகக்கொண்டு பிற்காலத்தில் தோன்றிய பிரிவுகளை எடுத்துக் காட்டுக.
05. இஸ்லாமிய அகீதாவின் தூய்மையைப் பாதுகாக்க இமாம்கள் ஆற்றிய பணி யாது?

## 1.2 அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஅ அகீதா

இஸ்லாத்தின் நம்பிக்கைக் கோட்பாட்டை விளக்கும் கலையே இல்முல் அகீதா எனப்படுகின்றது. முதலாவது பாடத்தில் குறிப்பிடப்பட்ட வரலாற்றுச் சிக்கல் மூலம் உருவான அல்லாஹ்வைப் பற்றியும் அவனது தாத், ஸிபாத், அஸ்மா, அப்ஆல் பற்றியும் எழுந்த சர்ச்சைகளை இக்கலை விளக்குகின்றது. அல்- குர்ஆன், அஸ் - ஸுன்னா மூலம் பெறப்பட்ட ஆதாரங்களை வைத்தே இது வகுக்கப்பட்டுள்ளது. அகீதாவின் அடிப்படை பற்றிய தெளிவு புலனறிவின் மூலமோ, பகுத்தறிவின் மூலமோ மட்டும் பெறப்பட முடியாததாகும்.

இல்முல் அகீதாவைப் பற்றிய சரியான அறிவையும் தெளிவையும் பெறுவதிலேயே ஒருவரின் ஈருலக வெற்றி தங்கியுள்ளது என்பது ஒரு முஸ்லிமின் நம்பிக்கையாகும். ஏனெனில் இவ்வறிவின் மூலமே ஒருவர் தான் யார்? தனது ஆரம்பம் என்ன? தன்னைப் படைத்தவன் யார்? தனது முடிவு யாது? இவ்வுலகில் தனக்குரிய இடம் யாது? தனது பணிகள் யாவை? போன்ற அடிப்படை வினாக்களுக்கான விடைகளைப் பெற்றுக் கொள்கின்றார்.

அல்லாஹ்வைப் பற்றியும் மறைவான ஏனைய விடையங்களைப் பற்றியும் தெரிந்து கொள்வதில் மனித சமூகத்தில் இரு பிரிவினர் இருந்து வந்துள்ளனர். ஒரு பிரிவினர் இது விடயத்தில் நபித்துவம், ரிஸாலத் உட்பட விசேட அறிவையும் இறை வழிகாட்டலையும் பெற்ற இறைத்தூதர்களை நம்பினர். ஏனெனில் அவர்கள் இப்பணிக்காகக் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். அல்லாஹ்வைப்பற்றியும் அவனது திருப்தியைப் பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகள் பற்றியும் மனிதர்களுக்கு சொல்லிக் கொடுப்பதற்காக வந்தவர்கள். அதற்கான எல்லா அறிவையும் வழிகாட்டல்களையும் அல்லாஹ் அவர்களுக்குக் கொடுத்திருந்தான். இறைதூதர்களில் ஒருவரான நபி இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களைப்பற்றி அல்-குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

**மேலும் வானங்களுடையவும் பூமியுடையவும் (எமது) ஆட்சியை நாம் இப்றாஹீமுக்கு இவ்வாறே காண்பித்தோம். அவர் உறுதி கொண்டவர்களில் ஆவதற்காகவும் (இவ்வாறு செய்தோம்) (6:75)**

மேலும் நபி இப்றாஹீமிடம் அல்லாஹ்வைப் பற்றி அவரது உம்மத்தினர் அறிவோ தெளிவோ இன்றி விவாதித்த போது அவர் அவர்களுக்குக் கூறிய பதிலை அல்-குர்ஆன் இப்படிக் கூறுகின்றது.

**மேலும் (இதைப்பற்றி) அவருடன், அவருடைய சமூகத்தார்கள் விவாதித்தார்கள். அதற்கவர் கூறினார். ‘‘நீங்கள் அல்லாஹ்வைப் பற்றியா என்னுடன் விவாதிக்கின்றீர்கள் அவனோ எனக்கு நேர்வழியைக் காட்டி விட்டான்................’’ (6:80)**

மேற்கண்ட முதற்பிரிவினர் நபிமார்களின் வழிகாட்டலுடன் தமது அறிவாற்றல், உளத்தூய்மை முதலியன கொண்டும் தமது ஈமானை வலுப்படுத்திக் கொண்டனர்.

மறு பிரிவினர் வெறுமனே தமது விவேகம், அறிவாற்றல், அனுபவங்கள், பரிசோதனைகள் ஆகியவற்றின் மூலம் மட்டும் இறைவனையும் ஏனைய மறைவான

விடயங்களையும் விளங்க முற்பட்டனர். இவர்கள் ஓர் இரசாயனப் பொருளையோ இயற்கையின் ஒரு சக்தியையோ பகுப்பாய்வு செய்வது போன்று அல்லாஹ்வையும் அவனது தாத், ஸிபாத் முதலியவற்றையும் தமது ஆய்வுக்கும் பரிசோதனைக்கும் உட்படுத்த முனைந்தனர். இவ்வழியில் முன்னணியில் நின்றவர்கள் கிரேக்க இறையியல் ஆய்வாளர்களாவார். எத்தகைய தெய்வீக வழிகாட்டலையும் பெறாத இவர்கள் தமது அறிவு, ஆராய்ச்சியில் மட்டும் தங்கிநின்று இறையியல் பற்றிப் பல்வேறு தத்துவங்களையும் கோட்பாடுகளையும் முன் வைத்தனர். பிற சமூகங்களின் அறிஞர்களும், ஆய்வாளரும் இவர்களின் ஆய்வுமுறைமைகளையும் முடிவுகளையும் ஏற்றுப் பின்பற்றத் தொடங்கினர். தூய்மையானதும் முழுமையானதுமான ஒரு மார்க்கத்தைப் பெற்றிருந்த முஸ்லிம்களில் சிலரும்கூட கிரேக்க தத்துவங்களால் கவரப்பட்டு, அவற்றின் அடிப்படையில் இஸ்லாமிய அகீதாவை அணுகவும் ஆராயவும் முற்பட்டனர். இவர்களுள் நல்ல நோக்கம் கொண்டோரும் இருக்கவே செய்தனர். அத்தோடு, பிழையான நோக்கமுடையோரும் ஈமானில் பலவீனமானோரும் இருந்தனர். எவ்வாறாயினும், இத்தோற்றப்பாடானது இஸ்லாமிய அகீதாவின் தூய்மையைப் பாதித்தது. இஸ்லாமிய நம்பிக்கைகள் தொடர்பான எதிரும் புதிருமான நிலைப்பாடுகள் தோன்றின. (மு.ஃ.தஸிலாக்கள், கதரிய்யாக்கள், ஜபரிய்யாக்கள், முர்ஜியாக்கள், பாதினிகள் என்றெல்லாம்) பல பிரிவுகள் தோன்றின.

இந்நிலையில் நபித்தோழர்களும் ஸலபுஸ்ஸாலிஹீன்களும் கொண்டிருந்த தூய இஸ்லாமிய அகீதாவான அஸ்ஸுன்னா வல்ஜமாஆ என்ற கோட்பாட்டைப் பாதுகாக்கவும் விபரிக்கவும் குர்ஆன், ஸுன்னாவை அடிப்படையாகக்கொண்ட அகீதாவின் உண்மையை விளக்கவும் ஆற்றல்பெற்ற பல அறிஞர்கள் தோன்றினர். இவர்களது முயற்சியின் விளைவாக இஸ்லாமிய அடிப்படை நம்பிக்கைகளின் தூய்மை பாதுகாக்கப்பட்டது. காலப்போக்கில் அது ஒரு தனிக் கலையாகவும் வளர்ச்சி கண்டது.

## அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஆ அகீதாவின் சாராம்சம் - சில அம்சங்கள்

### அல்லாஹ்

அல்லாஹ்வே இவ்வுலகின் படைப்பாளன், பரிபூரணத்துவத்தின் எல்லாப் பண்புகளையும் பெற்ற அவன் குற்றங்குறைகளைக்கொண்ட எல்லாத் தன்மைகளிலிருந்தும் தூய்மையானவன், அனைத்தும் அறிந்தவன், எல்லாவற்றின் மீதும் சக்தியுடையவன், தன் நாட்டப்படி சுதந்திரமாகச் செயற்படக் கூடியவன், நித்திய ஜீவன், கேட்பவன், பார்ப்பவன், அவனுக்கு நிகராக - சமமாக எவரும் - எதுவும் இல்லை. வணக்கத்துக்குரியவன் அவன் மட்டுமே. வாழ்வாதாரங்களை வழங்குபவனும், துன்பங்களை நீக்குபவனும், நோயைக் குணப்படுத்துபவனும் அவனே. அவன், ஒன்றை நாடி ''ஆகுக'' என்றால் அது ஆகிவிடும். அவன் தன்னில் நிலைத்திருப்பவன். அவன் ஸ்தூலமோ சூட்சுமமோ அல்ல. அவன் எதிலும் குடிகொள்வதில்லை. எவற்றுடனும் இணைவதுமில்லை, சங்கமமாவதுமில்லை. அவன் நாடியது நடக்கும். நாடாதது நடக்காது. மு.ஃ.மின்கள் மறுமையில் அவனைக் காணும் பேற்றைப் பெறுபவர்.

நன்மை, தீமை யாவும் அவன் நிர்ணயித்தபடியே நடக்கின்றன. நிகழ்ந்தவை - நிகழ்கின்றவை - நிகழ இருப்பவை ஆகிய அனைத்தும் அவனது திட்டப்படியே இடம்பெற்று வருகின்றன.



இலவச விநியோகத்திற்காக

## மலக்குகள்

அல்லாஹ் மலக்குகளைப் படைத்துள்ளான். அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைப்படி அடியார்களின் நலன்களைக் கவனித்து வருகின்றனர். வானத்திலும், பூமியிலும் அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றி வருகின்றனர்.

## அல்-குர்ஆன்

அல்-குர்ஆன் அல்லாஹ்வின் வேதமாகும். அல்-குர்ஆனுக்கு முன்பு பல வேதங்கள் அருளப்பட்டன. அவை அல்-குர்ஆன் மூலம் மாற்றப்பட்டு செல்லுபடியற்றவையாகிவிட்டன.

## மறுமை

மரணத்தின் பின்பு ஒரு வாழ்வு உண்டு. அதனை மறுமை என்பர். ஒவ்வொருவரது உலக வாழ்வு பற்றியும் அங்கு விசாரணை நடைபெறும். இவை அனைத்தும் உண்மையானவை. ஸிராத், மீஸான், சுவனம், நரகம் என்பன படைக்கப்பட்டுள்ளன. ரூஹுகள் மனிதனிலிருந்து பிரிந்தாலும் அவை அழியாதவை. ஆனால், அவற்றுக்கு ஆரம்பம் உண்டு.

## பாவம்

பெரும் பாவத்தில் ஈடுபட்ட முஸ்லிம் பாவியாவான். ஆனால், காபிராக மாட்டான். பெரும் பாவங்களில் ஈடுபட்ட ஒரு முஸ்லிம் நரகம் நுழைந்தாலும் நிரந்தரமாக அங்கு தங்கமாட்டான். அல்லாஹ் நாடினால் தண்டித்து பின்னர் சுவனம் நுழைவிப்பான். அல்லது மன்னித்து சுவனம் நுழைவிப்பான்.

குப்ரையோ, ஷிர்க்கையோ உண்டாக்கும் ஒரு கருமத்தில் ஈடுபடாத நிலையில் ஒரு முஸ்லிமைக் காபிர் என்றழைப்பது பெருங் குற்றமாகும். ஒரு பாவத்தைப் பாவமல்ல எனக் கருதுவதும், ஒரு ஹராமை ஹராமல்ல எனக் கொள்வதும் குப்ரை ஏற்படுத்தும். ஷரீஅத்தைப் பரிகாசம் செய்வதுகூட குப்ரை ஏற்படுத்தும்.

மறுமையில் 'ஷபாஅத்' உண்டு. அல்லாஹ்வின் அனுமதியைப் பெற்று மறுமையில் சிலர் சிலருக்காக சிபார்சுசெய்யும் வாய்ப்பினைப் பெறுவர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தனது உம்மத்தைச் சேர்ந்த பாவிகளுக்காக மறுமையில் விசேட ஷபாஅத்தில் ஈடுபடுவார்கள். இது ''ஷபாஅதுல் குப்ரா'' எனப்படுகின்றது.

கப்ரில் பாவிகளுக்கு வேதனை உண்டு. மு.்.மின்கள் இன்பங்களை அனுபவிப்பர். கப்ரில் முன்கர், நகீர் என்ற மலக்குகள் விசாரணை செய்வர்.

## ரிஸாலத்

மனித சமுதாயத்திற்கு வழிகாட்டுவதற்காக அல்லாஹ் காலத்துக்குக் காலம் நபிமார்களையும் ரஸூல்மார்களையும் அனுப்பி வைத்தான். இவர்கள் மூலமாக அல்லாஹ் தனது அடியார்களுக்கு ஏவல்களையும், விலக்கல்களையும் வழங்கினான். அவர்கள், ஏனைய மனிதர்களுடன் ஒப்பிடும்போது பல சிறப்பம்சங்களைப் பெற்றிருந்தனர். மு.்.ஜிஸாத் எனும் அற்புதங்கள், சீரான இயல்பு, உயர் பண்புகள், இஸ்மத் எனும் பாவங்கள் செய்வதிலிருந்து பாதுகாப்பு ஆகியன அவற்றுள் பிரதானமானவை. நபிமார்கள், ரஸூல்மார்கள் அனைவரையும் எத்தகைய வேறுபாடுமின்றி ஏற்று நம்புதல் வேண்டும். இறை வேதங்களையும் நம்புதல் வேண்டும்.

முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இறுதி நபியாவார்கள். அவர்களுக்குப் பின்னர் வேறொரு நபி வரப்போவதில்லை. அவர்களின் தூது மனித, ஜின்

வர்க்கங்களுக்குப் பொதுவானதும் மறுமைநாள் வரை நிலைத்து நிற்பதுமாகும். நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், நபிமார்கள், ரஸூல்மார்களில் உயர்ந் தவராவார். அவர்கள் தனக்கேயுரிய பல சிறப்பம்சங்களையும் பெற்றிருந்தார்கள். அவர்கள் மி.ஃராஜ் சென்றார்கள். இவையனைத்தும் சத்தியமானவை.

## ஸஹாபாக்கள்

முஃமீன்களில் உயர்ந்தவர்கள் நபித் தோழர்களான ஸஹாபாக்கள் ஆவர். நபிமார்களுக்கு அடுத்த நிலையில் மிகவுயர்ந்த ஸ்தானத்தில் இருப்பவர்கள். ஸஹாபாக்களில் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு, உமர் ரழியல்லாஹு அன்ஹு, உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு, அலி ரழியல்லாஹு அன்ஹு ஆகியோர் முறையே சிறப்பிடம் பெறுவர். இவர்களில் சுவனத்தைக் கொண்டு நன்மாராயம் கூறப்பட்ட பத்து நபித் தோழர்கள் (அல்அஷரதுல் முபஷ்ஷரூன்) உள்ளனர்.

'அஹ்லுல்பைத்' எனும் நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் குடும்பத்தையும் உம்மஹாத்துல் முஃமினீன் எனப்படும் அவர்களின் மனைவிமார்களையும் கௌரவப்படுத்தவும் அவர்கள் மீது அன்பு கொள்ளவும் வேண்டும். ஸஹாபாக்கள் அனைவரும் நம்பிக்கையும் நாணயமும் கொண்டவர்கள் என்பது அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஆவின் நம்பிக்கையாகும். ஆதலால், ஸஹாபாக்களைக் குறைகூறுதல் கூடாது. அவர்களைத் தூற்றுவது பெரும் பாவமாகும். அவர்கள் நமது வழிகாட்டிகள் ஆவார்.

## வலிமார்கள்

வலிமார்கள் எனப்படுவோர் அல்லாஹ்வின் கட்டளைகளைச் சரிவர நிறைவேற்றி, அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற்றவர்களாவார். அடியார்களில் எவரும் அவர் எத்தகைய ஆன்மிக தரத்தையடைந்த போதிலும், அடிப்படைச் சன்மார்க்கக் கடமைகளிலிருந்து விதிவிலக்களிக்கப்பட மாட்டார். ஏனையவர்கள் போன்றே அவர்களும் ஹராம் ஹலால்களைப் பேணி நடக்க வேண்டும். அவர்களால் இடம்பெறும் அற்புதங்கள் **கராமத்** எனப்படுகின்றன.

ஈமான் கொள்ள வேண்டிய ஆறு அம்சங்களையும் பற்றி முன்னைய வகுப்புக்களில் படித்துள்ளோம். இங்கு அவற்றுடன் தொடர்பான சில விடயங்களில் அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஆவின் நிலைப்பாடுகளையே எடுத்துக் காட்டினோம். எமது வாழ்வில் அவற்றை ஏற்று நடப்போம்.

## செயற்பாடுகள்

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

01. இல்முல் அகீதா என்றால் என்ன?

02. அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஆ என்பதன் பொருள் யாது?

03. பின்வரும் சொற்களை இஸ்லாமிய அடிப்படையில் விளக்குக.

| | | | |
|---|---|---|---|
| i. | மலக்குகள் | ii. | அல்-குர்ஆன் |
| iii. | பாவம் | iv. | மறுமை |
| v. | ரிஸாலத் | vi. | ஸஹாபாக்கள் |
| vii. | வலிமார்கள் | | |

## 1.3 வாழ்க்கையில் ஈமானின் செல்வாக்கு

நம்பிக்கையை அடிப்படையாகக்கொண்டே வாழ்க்கை அமைகின்றது. இஸ்லாத்தைப் பொறுத்தவரையும் ஈமான்தான் முஸ்லிமுடைய வாழ்க்கையை இயக்கிக் கொண்டிருக்கின்றது. ஏனெனில், ஈமான் மனித உள்ளத்துடன் மாத்திரம் தொடர்புறுவதில்லை. மனிதனின் அறிவு, செயற்பாடு, மனப்பாங்கு, சமூக உறவு, தொழில் முயற்சி, குடும்ப வாழ்வு முதலான எல்லாத் துறைகளிலும் அது செல்வாக்குச் செலுத்துகின்றது. இதனைத் தான் நாவினால் மொழிந்து, உள்ளத்தினால் உறுதிபூண்டு, உடம்பினால் செயற்படுத்துதல் என்று ஈமானுக்கு விளக்கம் கூறப்படுகின்றது.

**ஈமான்**

| ஈமான் முஜ்மல் | ஈமான் முபஸ்ஸல் |
|---|---|
| சுருக்கமான ஈமான் | விரிவான ஈமான் |
| லா இலாஹா இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் | அல்லாஹ், மலக்குகள், கத்ர், ரஸூல்மார்கள், வேதங்கள், மறுமை நாள் போன்றன பற்றிய விரிவான ஈமான் |

**ஈமானின் பிரதான அம்சம் தௌஹீத் ஆகும்**

அல்லாஹ் இருக்கின்றான். அவன் ஒருவன். வணங்குவதற்கும் வழிபடுவதற்கும் தகுதியானவன் அவன் ஒருவன் மட்டுமே என்ற நம்பிக்கை அல்லாஹ்வைத் தவிர வேறு எதனையும் எவரையும் வணங்காமலும் வழிபடாமலும் இருக்கக் காரணமாக அமைகிறது. அல்லாஹ்வின் திருநாமங்கள், பண்புகள், ஆற்றல்கள், செயல்கள் முதலியவற்றைத் தெளிவாக விளங்கிக் கொண்ட மு∴மின் அல்லாஹ்வைத் தவிர வேறு எவரையும் இலாஹாக ஏற்க மாட்டான். எவரிடத்திலும் பிரார்த்தனை செய்ய மாட்டான்.

அல்லாஹ்வைப் பற்றித் தெளிவாக அறிந்துகொண்ட அவன் அல்லாஹ்வின் விருப்பங்களை மகிழ்வோடு நிறைவேற்றுவான். அல்லாஹ் வெறுத்தவைகளிலிருந்து எப்போதும் விலகிக் கொள்வான். அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்றுக்கொள்வதற்காக அல்லும்பகலும் முயற்சிப்பான். அவனது உலகியல் முயற்சியில் வெற்றி கிடைத்தாலும் தோல்வியடைந்தாலும் அது அல்லாஹ்வின் முன்னேற்பாட்டின்படி நிகழ்ந்ததாக நம்பி அமைதி பெறுவான்.

**ஈமானின் அடுத்த பிரதான அம்சம், ரிஸாலத் பற்றிய நம்பிக்கையாகும்.**

அல்லாஹ் உலகில் மனிதனை அவனது பிரதிநிதியாகப் படைத்தான். அவன் வாழ்வதற்குத் தேவையான எல்லா வழிகாட்டல்களையும் நபிமார்கள், ரஸூல்மார்களுக்கு அருளப்பட்ட வேதங்கள், ஸுஹ்புகள் மூலம் வழங்கினான். இவற்றின் மீது நம்பிக்கை கொள்கின்ற மனிதன் அந்த வேதங்களையும் நபிமார்களையும் வழிகாட்டியாகக் கொள்கிறான். வேதங்கள் கட்டளையிடுகின்றவற்றை தைரியத்துடனும் விருப்பத்துடனும் நிறைவேற்ற முன்வருகின்றான். அவை தடுத்தவற்றைத் தானும் தவிர்த்துக்கொள்வதோடு பிறரையும் தடுக்கின்றான். சிலவேளை, வேதக் கருத்துக்கள் தனது குறுகிய அறிவுக்குப் புலப்படாவிட்டாலும் தனது நலனுக்குத் தடையாக இருப்பதாகத் தெரிந்தாலும் அல்லாஹ்வின் கட்டளை என்பதற்காக அவற்றை நிறைவேற்றுகின்றான். இந்த வேதங்களையும், ஸுஹ்புகளையும் மனிதருக்கு எத்திவைக்க அல்லாஹ் ஓர் இலட்சத்திற்கு மேற்பட்ட நபிமார்களைத் தேர்ந்தெடுத்தான். அவர்களில் சுமார் 313 பேர் ரஸூல்மார்கள் ஆவர். அல்-குர்ஆனில் 25 நபிமார்களின் நாமங்கள் கூறப்பட்டுள்ளன. இறுதி நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வபாத்தோடு நபிமார்களின் வருகை முற்றுப் பெற்றுவிட்டது. அவர் இறுதி நபி, அவருக்குப் பின்னர் நபிமார்கள் தோன்றமாட்டார்கள். எந்த ஒரு மார்க்கமோ, நபியோ வர வேண்டிய தேவையும் இல்லை.

முஃமினானவன் அல்-குர்ஆனும், ஸுன்னாவும் கூறும் நற்காரியங்களைப் பின் பற்றுகின்றான். பிறருக்கு ஏவுகின்றான். அவை தடுக்கும் தீய செயல்களிலிருந்து தானும் விலகி, பிறரையும் விலகுமாறு கட்டளையிடுகின்றான். வேதக்கட்டளைப்படி நடந்தால் இம்மையில் நல்வாழ்வும் மறுமையில் ஈடேற்றமும் கிடைக்குமென உறுதியாக நம்பிச் செயற்படுகின்றான். தான் செய்யப்போகின்ற எந்தக் காரியத்தையும் அது அல்லாஹ்வினதும் ரஸூலினதும் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளதா என ஆராய்ந்து பார்த்தே செய்வான்.

**ஈமானின் அடுத்த பிரதான அம்சம், மரணத்துக்குப் பின்புள்ள வாழ்க்கை பற்றியதாகும்.**

மனித வாழ்க்கை மரணத்தோடு முற்றுப்பெறுவதில்லை. உலக வாழ்க்கை விவகாரங்கள் பற்றி மறுமையில் விசாரிக்கப்படும். அதற்காக அவன் பயன்படுத்திய உறுப்புக்கள், அவனது செயல்கள் பற்றிய மலக்குகளின் பதிவுகள் முதலியன சாட்சிகளாகக் கொண்டுவரப்படும். இதனை நம்பிய முஃமின், மறுமை விசாரணைக்கும் தண்டனைக்கும் பயந்து செயற்படுவான். மறுமையில் அனைவருக்கும் முன்னிலையில் தனது தவறான செயற்பாடுகள் பகிரங்கமாவதை வெட்கக்கேடாகக் கருதுவான். ஆதலால் பொய், புறம், அவதூறு, வஞ்சம், சூது, களவு, போதைப் பொருட்பாவனை, வன்முறை போன்ற பாவமான காரியங்களிலிருந்தும் விலகிக் கொள்வான். பிறருக்குரிய கடமைகளைச் சரிவர நிறைவேற்றுவதோடு, பிறரது உரிமைகளையும் மதித்து நடப்பான். இரகசியத்திலும் பரகசியத்திலும், பாராட்டினாலும், பாராட்டவிட்டாலும் மறுமையின் நற்பேறுக்காக அவன் நல்ல காரியங்களைச் செய்வான். இவையனைத்தும் வாழ்க்கையில் ஈமான் ஏற்படுத்தும் தாக்கங்களாகும். முஃமின் அல்லாஹ்வின் அருளையும், அன்பையும், திருப்தியையும் பெற்றுக்கொள்வதற்காக அவனது உடல், பொருள், நேரம், சக்தி, உயிர் ஆகிய அனைத்தையும் தியாகம்செய்ய முன்வருவான்.

இந்தப் பண்புகளை நபிமார்களின் வாழ்க்கையில் நாம் காண்கின்றோம். ஸஹாபாக்களின் வாழ்க்கையிலும் காண்கின்றோம். அவர்களைத் தொடர்ந்து வாழ்ந்த ஸாலிஹீகளின் வாழ்க்கையிலும் காண்கின்றோம்.

நபி இப்றாஹீம் அலைஹிஸ்ஸல்லாம் அவர்களின் வாழ்வை அவதானித்துப் பாருங்கள். அவர்களது ஈமானைப் பரீட்சிப்பதற்காக அல்லாஹ் அவர்களை நம்ருதின் நெருப்புக் குண்டத்தில் எறிய வைத்தான். மனைவி, மக்கள், பிறந்த நாடு, செல்வம் ஆகியவற்றைத் துறக்க வைத்தான். ஆனால், அவர்களின் ஈமானில் தளம்பல் ஏற்படவில்லை.

தான் உயிரோடிருந்து இஸ்லாம் மடிவதை விட, இஸ்லாம் உயிரோடிருந்து தான் மடிவது மேலானது எனக் கருதிய இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் சத்தியத்திற்காகத் தனது உயிரையே அர்ப்பணிக்க முன்வந்தார்கள்.

இந்த நூற்றாண்டிலும்கூட ஈமானின் தாக்கத்தால் உந்தப்பட்ட நல்லோர்கள் வாழ்ந்திருக்கிறார்கள், வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம். முஸ்லிம் சமுதாயம் எத்தனை சோதனைகளை எதிர்கொண்டாலும், கொண்ட கொள்கையில் உறுதியாக நிற்பது ஈமானின் செல்வாக்கினாலேயே ஆகும். ஆதலால், நாமும் எமது ஈமானை உறுதிபடுத்தி எமது செயற்பாடுகளிலும் ஈமானின் தாக்கத்தைப் பிரதிபலிக்கச் செய்வோமாக.

## சாராம்சம்

★ ஈமான் மனித உள்ளத்தை நெறிப்படுத்தி அவனது செயல்களைப் பரிசுத்தப் படுத்துகின்றது.

★ ஈமான் மனித உள்ளத்தில் ஏற்படுத்தும் மாபெரும் மாற்றம் தக்வா எனும் இறையச்சமாகும். இவ்விறையச்சம் ஏற்படும் மனிதன், குர்ஆனிலும் ஸுன்னாவிலும் உள்ள கோட்பாடுகளையும் சட்டங்களையும் உள்ளதை உள்ளவாறு நம்பி செயற்படுத்துவான். இதனாலேயே ''அல் - ஈமானு பில்கைப்'' என்ற மறைவான விடயங்கள் பற்றிய நம்பிக்கை இஸ்லாத்திலே முக்கியத்துவம் பெறுகின்றது.

★ ஈமான் மனித வாழ்வு முழுவதையும் வணக்கமாக மாற்றிவிடும்.

★ சகல பாவங்களிலிருந்தும் ஈமான் மனிதனைத் தடுக்கிறது.

★ மனிதனில் சகல ஆளுமைப் பண்புகளையும் ஈமான் உருவாக்குகின்றது. பொறுமை, நிதானம், வீரம், துணிவு போன்ற மனப்பாங்குகளையும் அது தோற்றுவிக்கின்றது.

★ ஈமான் வாழ்வுக்கு ஒரு அர்த்தத்தையும், இலட்சியத்தையும் வழங்குகின்றது.

## செயற்பாடுகள்

மிகப் பொருத்தமான சொற்களைக் கொண்டு வெற்றிடங்களை நிரப்புக.

1. ஈமான் என்றால் ....................... எனப் பொருள்படும்.
2. ஈமான் இரண்டு வகைகளாகப் பிரிக்கப்படும். அவை
   1. ........................ 2. .......................
3. ஈமானின் பிரதான அம்சம் ...................... என அழைக்கப்படும்.
4. நெருப்புக் குண்டத்தில் எறியப்பட்ட நபி ...................... ஆவார்.
5. தான் உயிரோடிருந்து ........................................... எனக் கருதிய இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் (றஹ்) அவர்கள் அதற்காகத் தனது உயிரையே அர்ப்பணிக்க முன் வந்தார்கள்.

இலவச விநியோகத்திற்காக

## 1.4 ஈமானுக்கு முரணான அம்சங்கள்

முந்திய பாடங்களில் ஈமானின் முக்கியத்துவத்தையும் செல்வாக்கையும் விளங்க முயற்சித்தோம். இப்பாடத்தில் இஸ்லாமியரின் வாழ்க்கையில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய ஈமானுக்கு முரண்பட்ட சில அம்சங்களை அவதானிப்போம்.

தௌஹீதைப் பாதிக்கும் விடயங்கள் 'ஷிர்க்' எனவும், ஈமானைப் பாதிக்கும் செயல்கள் 'குப்ர்' எனவும் வழங்கப்படுகின்றன.

### ஷிர்க்

ஷிர்க் என்பது தவ்ஹீத் என்ற பதத்தின் எதிர்ச் சொல்லாகும். இணையாக்குதல், கூட்டுச்சேர்த்தல், பங்குகொடுத்தல் என்பன இதன் கருத்தாகும். அல்லாஹ்வின் தெய்வீகத் தன்மையில் எவருக்கேனும் எந்த சக்திக்கேனும் பங்குண்டு என்று நம்புதல் அல்லது அத்தகைய நம்பிக்கையைப் பிரதிபலிக்கும் வகையில் எச்செயலையேனும் செய்தல், வார்த்தைகள் மூலம் வெளிப்படுத்தல் ஷிர்க் எனப்படுகின்றது. ஷிர்க்கில் ஈடுபடுபவர் முஷ்ரிக் எனப்படுகின்றார்.

நான் உங்களுக்கு ஒரு பயங்கரமான பாவத்தை அறிவிக்கவா? என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வினவியபோது ஸஹாபாக்கள் ஆம், யாரஸுலல்லாஹ் எனப் பதிலளித்தார்கள். இணைவைப்பதும், பெற்றொருக்கு மாறு செய்வதும் என நபியவர்கள் பதிலளித்தார்கள். (அல் - ஹதிஸ்)

ஷிர்க்கை, ஷிர்க் அஸ்கர் (சிறிய ஷிர்க்), ஷிர்க் அக்பர் (பெரிய ஷிர்க்) என இரண்டாக வகுப்பர். அல்லாஹ்வுடன் சேர்த்து வேறு தெய்வங்களையும் வணங்குவது பெரிய ஷிர்க் ஆகும். வேறு தெய்வங்கள் எனும் வட்டத்தில் சூரியன், சந்திரன், கற்கள், மரங்கள், மிருகங்கள், மனிதர் போன்ற அல்லாஹ் அல்லாத ஏனைய படைப்புக்கள் அனைத்தும் அடங்குகின்றன. பெரிய ஷிர்க்கில் ஈடுபடுபவரின் எந்த ஒரு 'அமலை'யும் அல்லாஹ் அங்கீகரிக்க மாட்டான். மறுமையில் இவர்களின் பாவங்களை அல்லாஹ் மன்னிக்கவும் மாட்டான். ஷிர்க்கில் ஈடுபடுபவருக்கு சுவனம் ஹராமாக்கப்பட்டுள்ளது. இவை பற்றி அல்-குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது.

*''நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணைவைப்பதை மன்னிக்கவே மாட்டான். அது அல்லாத (குற்றத்)தை, அதுவும் தான் விரும்பியவர்களுக்கே மன்னிப்பான். ஆகவே, எவன் அல்லாஹ்வுக்கு இணை வைக்கிறானோ அவன் வெகு தூரமான வழிகேட்டில் தான் இருக்கிறான்'' (4:116)*

*''எவன் அல்லாஹ்வுக்கு இணைவைக்கிறானோ அவனுக்கு நிச்சயமாக அல்லாஹ் சுவனத்தைத் தடுத்து விடுகின்றான். அவன் தங்குமிடம் நரகம்தான். இத்தகைய அக்கிரமக்காரர்களுக்கு (மறுமையில்) உதவி செய்வோர் எவரும் இல்லை'' (5:72)*

ஷிர்க்கின் இரண்டாவது வகை சிறிய ஷிர்க்காகும். இது பெரிய ஷிர்க்குடன் ஒப்பிடும்போது பெறுமானத்தில் குறைந்ததாயினும் 'கபாயிர்' எனும் பெரும் பாவங்களை விடப் பெரியதாகும். ஆதலால், தௌபா செய்யாதபோது கபிராக மரணிக்கக்கூட இடமுண்டு என இமாம்கள் கூறுகின்றனர். சிறிய ஷிர்க்கில் அடங்குவனவற்றின் பட்டியல் மிக நீண்டது.

அல்லாஹ் அல்லாதவை மீது சத்தியம் செய்தல், முகஸ்துதி, தற்பெருமை, மந்திரித்தல், தாயத்துக் கட்டுதல், சூனியம் செய்தல், சாஸ்திரம் பார்த்தல், குறி கேட்டல், சகுனம் பார்த்தல் முதலியன இதற்கு உதாரணங்களாகும்.

## குப்ர்

குர்ப் என்பது ஈமான் என்ற சொல்லின் எதிர்ச் சொல்லாகும். நிராகரித்தல், மறுத்தல் என்பது இதன் கருத்தாகும். அரபு மொழி வழக்கில் குப்ர் எனும் பதத்துக்கு மறைத்தல், திரையிடுதல் என்ற கருத்தும் உண்டு. இஸ்லாத்தின் இயல்பு நிலையில் பிறந்த மனிதன், அவனது இயல்பு நிலைக்குத் திரையிட்டுக் கொண்டிருப்பதால் காபிர் எனப்படுகின்றான்.

குப்ரை ஏற்படுத்தும் வழிகளை மூன்றாக வகுப்பர். அவை:

1. நம்பிக்கை சார்ந்தவை
2. சொல் சார்ந்தவை
3. செயல் சார்ந்தவை

## 1. நம்பிக்கை சார்ந்தவை

இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாட்டுடன் முரண்படும் அம்சங்கள் இதில் அடங்கும். குப்ரை உண்டாக்கும் இத்தகைய நம்பிக்கைகளுக்குச் சில உதாரணங்கள் வருமாறு:

### 1. இறை நம்பிக்கையுடன் தொடர்பானவை

(அ) படைப்பாளன் ஒருவன் இல்லையென நம்புதல்.

(ஆ) அல்லாஹ்வுக்கு இருக்கவேண்டிய பண்புகளில் ஒன்றை நம்ப மறுத்தல்.

(இ) அல்லாஹ்வுக்கு இருக்கக்கூடாத பண்புகளில் ஒன்றை அவனுக்கு உண்டு என நம்புதல்.

### 2. தூதுத்துவ நம்பிக்கையுடன் தொடர்பானவை

(அ) ஒரு நபியை ஏற்க மறுத்தல்.

(ஆ) முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ரிஸாலத்தை நிராகரித்தல்.

(இ) முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குப் பின் நபி தோன்ற முடியும் என நம்புதல்.

### 3. மறைவான விடயங்கள் பற்றிய நம்பிக்கையுடன் தொடர்பானவை

(அ) மலக்குகள், ஜின்கள் முதலானோரை நம்பாதிருத்தல்.

(ஆ) மறுமையை நம்ப மறுத்தல்.

(இ) விசாரணை, சுவர்க்கம், நரகம் முதலானவற்றை நம்ப மறுத்தல்.

### 4. ஷரீஅத் சட்டங்களுடன் தொடர்பானவை.

(அ) அர்கானுல் இஸ்லாத்தில் ஒன்றை நம்ப மறுத்தல்.

(ஆ) வட்டி, விபச்சாரம், கொலை முதலானவை ஹராமானவை என்பதை ஏற்க மறுத்தல்.

(இ) திருமணம் முதலான ஹலாலானவற்றை ஹராமாகக் கருதுதல்.

## 2. சொல் சார்ந்தவை

இஸ்லாத்துக்கு முரணான ஒரு நம்பிக்கையை ஏற்றிருப்பதைக் குறிக்கும் வார்த்தைகள் அல்லது இஸ்லாமிய நம்பிக்கை ஒன்றை நிராகரிப்பதைக் குறிக்கும் வார்த்தைகள் இப்பகுதியில் அடங்கும்.

அல்லாஹ்வைத் தூற்றுதல், நபிமார்களை அவமதித்துப் பேசுதல், அல்லாஹ்வுடைய நீதியில் குறைகாணுதல், நபி (ஸல்) அவர்களின் ஸுன்னாவைப் பரிகசித்துப் பேசுதல் ஆகியன குப்ரை உண்டாக்கும். இவை சொல் சார்ந்த குப்ருக்கு மற்றும் சில உதாரணங்களாகும்.

## 3. செயல் சார்ந்தவை

குப்ரை வெளிப்படுத்தும் அனைத்துச் செயல்களும் இப்பகுதியில் அடங்கும். இழிவுபடுத்தும் நோக்குடன் அல்குர்ஆன் பிரதியைக் கிழித்தல் அல்லது குப்பைத் தொட்டியில் அதனை எறிதல், சிலைக்கு முன்னால் சாஸ்டாங்கம் செய்தல் ஆகியவற்றை இதற்கு உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.

## ரித்தத்

மேலே கூறப்பட்ட பெரிய ஷிர்க்கையும் குப்ரையும் ஏற்படுத்துகின்ற விடயங்களில் ஒன்றைச் செய்கின்றபோது ஏற்படுவதே **ரித்தத்** ஆகும். ரித்தத் எனும் அரபிப் பதத்தின் பொருள் திரும்பி விடுதல், பின்னோக்கிச் செல்லல் என்பனவாகும். நாம் இதனை இஸ்லாத்தை விட்டும் நீக்கிவிடும் எனும் பொருளில் பயன்படுத்துகின்றோம். ஒரு முஸ்லிமின் வாழ்வில் குப்ர் அல்லது ஷிர்க் நிகழ்ந்துவிடும் போது ரித்தத் ஏற்படுகிறது. ரித்தத்துக்கு உட்பட்டவர் 'முர்தத்' என அழைக்கப்படுகிறார்.

ஒரு முர்தத்தின் எந்த அமலும் ஏற்கப்பட மாட்டாது. முஸ்லிம் சமூகத்துடன் இவருக்குள்ள தொடர்புகள் துண்டிக்கப்பட்டுவிடும். இவரைப் பின்பற்றித் தொழவோ இவர் அறுத்த பிராணிகளை உண்ணவோ கூடாது. இவரது மனைவி தானாகவே தலாக் பெற்று விடுவாள். இவர் தௌபாச் செய்து கலிமா மொழிந்து இஸ்லாத்துக்குள் மீண்டும் நுழையாத நிலையில் மரணித்தால் முஸ்லிம் மையவாடியில் அடக்கம் செய்யப்பட மாட்டார்.

## செயற்பாடு

சுருக்கமான விடை தருக.

1. தௌஹீத் என்றால் என்ன?

2. ரித்தத்தின் வகைகளை உதாரணம் தந்து விளக்குக.

4. குப்ர் என்றால் என்ன? குப்ரை ஏற்படுத்தும் விடயங்கள் யாவை? அதன் சமூக விளைவுகளை எடுத்துக்காட்டுக.

5. ஷிர்க்குல் அக்பர், ஷிர்க்குல் அஸ்ஹர் என்பவற்றின் கருத்து யாது? ஒவ்வொன்றுக்கும் இவ்விரு உதாரணங்கள் வீதம் தருக.